பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 18 | 02- 07 - 94 | சனிக்கிழமை | ஓசை 134

## இலவச சீருடைப் பொதியிலிருந்து பிரேமாவின் செய்தி நீக்கம்

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கென அனுப்பிவைக்கப்பட்ட சீருடைப் பொதிகளில் இருந்த ஆர். பிரேமதாசாவின் செய்திகள் அகற்றப்பட்டு டதிலாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் செய்திகள் வைக்கப்பட்டு மீளப் பொதி செய்யும் வேலை யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெற்று வருகிறது. இப் பொதிகளில் இருந்த ஆர். பிரேமதாசாவின் செய்தியை அகற்றிவிட்டு டி. பி. விஜேதுங்காவின் செய்தியை வைத்து மாணவர்களுக்கு விநியோகிக்கும்படி கல்வி அமைச்சிலிருந்து வந்த உத்தரவையடுத்தே இவ்வேலை நடைபெற்றுவருகிறது. இப்பணி முடிவடைந்ததும் இலவச சீருடைப் பொதி அவ்வப்பகுதி கோட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது. (6ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி வெற்றிக்கு துணை நின்று வீரச்சாவடைந்த 13 கரும்புலிகள்

பலாலி கூட்டுப் படைத் தளத்தினுள் கரும்புலிகளாக புகுந்து சிறிலங்கா இராணுவத்திற்கு பேரிழப்பை ஏற்படுத்தியதன் மூலம் பூநகரி வெற்றிக்கு உறுதுணையாக நின்று 13 கரும்புலிகள் பெரும்பங்காற்றி வீரச்சாவை தழுவிக் கொண்டனர்.

கடந்த வருடம் நவம்பர் 11ஆம் திகதியன்று தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு சரித்திர நிகழ்வாகி விட்ட பூநகரி தளம் மீதான தவளை இராணுவ நடவடிக்கையின்போது அத் தாக்குதலுக்கு பக்கத் துணையாகி பலாலி படைத் தளத்தினுள் புகுந்து சிறிலங்கா இராணுவத்திற்கு பேரிழப்பை ஏற்படுத்தியதுடன் எதிரிக்கு பேரதிர்ச்சியையும் ஏற்படுத்திய பூநகரி வெற்றிக்கு இந் 13 கரும்புலிகளும் பெரும் பங்காற்றி வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

இக் கரும்புலிகளின் அதிரடித் தாக்குதல் சிறிலங்கா இராணுவ கட்டமைப்பினுள் பாரிய சீர் குலைவையும் இராணுவத்திற்கு நிலை தடுமாற்றத்தையும் ஏற்படுத்தியதால் பூநகரி தளத்தின் மீதான புலிகளின் தாக்குதலின் போது இக் கரும்புலித் தாக்குதல் பக் (6ஆம் பக்கம் பார்க்க)

## ஊழல், நிதிமோசடிகளால் வெளிநாட்டுதவி இடைநிறுத்தம்

(கொழும்பு)

கப்புகஸ்கந்த பகுதியில் அமைக்கப்படவிருந்த 40 மெகாவோல்ட் சக்திகொண்ட மின்பிறப்பாக்கி அமைப்புத் திட்டத்திற்காக ஜேர்மனியின் நிறுவனம் ஒன்றுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்த விடயத்தில் இடம்பெற்ற நிதி மோசடி மற்றும் ஊழல்களின் காரணமாக மேற்படி திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கீடு செய்த நிதியுதவி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக நான்கு கோடியே அறுபது லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான நிதியுதவி அளிக்க ஆசிய அபிவிருத்திவங்கி முன்வநதிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேபோல பிரான்சுநாட்டு நிறுவனமொன்றுடன் செய்து கொள்ளப்பட்ட மற்றுமொரு ஒப்பந்தத்திலும் நிதிமோசடி இடம்பெற்றுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளால் எதிர்காலத்தில் சிறிலங்காவிற்கு வழங்கப்படும் வெளிநாட்டு உதவித்திட்டங்களும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகி இருப்பதாகவும் கூறப்படுகிறது.

### கலந்துரையாடல்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றிய மாவட்ட, கோட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கான கலந்துரையா (6 ஆம் பக்கம் பார்க்க)

### கருத்தரங்கு இடமாற்றம்

சகல திணைக்களத் தலைவர்களுக்குமான கரும்புலிகள் நாள் கருத்தரங்குகளில் தீவகம், வலிகாமம் பகுதிகளுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை (6ஆம் பக்கம் பார்க்க)

# பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் கூட்டு

## ஐ. தே க. - இ. தொ. க. மிகுந்த நட்புறவுடையவை

(கொழும்பு)

அரசியல் ரீதியில் மிக நீண்ட காலமாக இ. தொ காவும் ஐ. தே. கவும் மிக இறுக்கமாகவும் நெருக்கமாகவும் செயற்பட்டு வந்திருக்கின்றன. மலையக மக்களின் சிறந்த வாழ்வுக்கும், தொண்டமான் உள்ளார் என அமைச்சர் காமினி திசாநாயக்கா கூறியுள்ளார்

மத்திய மாகாண சபையின் மீள அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள இ. தொ. கா உறுப்பினர் சதாசிவத்தின் பதவியேற்பு வைபவத்தி

## கிழக்கில்காங்கிரஸ் சின்னத்தில் போட்டி

(லண்டன்)

பொது ஜன ஐக்கிய முன்னணியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும், பாராளுமன்ற தேர்தல் குறித்து ஒரு பொது உடன்பாட்டிற்கு வந்துள்ளன. இதன் பிரகாரம், வடக்கு கிழக்கு மாகாணத்தில், பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள் முஸ்லிம் காங்கிரஸ் சின்னத்திலும், ஏனைய பகுதிகளில் முஸ்லிம் காங்கிரஸ் பொதுஜன ஐக்கிய முன்னணி சின்னத்திலும்

## பலாலியிலிருந்துஷெல்வீச்சு இளைஞர் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நேற்றிரவு மேற்கொண்ட எறிகணை தாக்குதலின்போது ஏழாலையைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்து யாழ்- போதனா வைத்தியசாலையில் அனும

பலாலி முகாம் பகுதியில் இருந்து மூன்று எறிகணை தொடர்ச்சியாக ஏவப்பட்டதாகவும் பக்கத்தில் இருந்த பெரிய மரத்தில் வீழ்ந்து வெடித்து சிதறிய துண்டுகள் இவர்மீது பட்டதினால் இவர் காயமடைந்தார் எனவும்

மாகவும் செயற்பட்டு வந்திருக்கின்றன. மலையக மக்களின் சிறந்த வாழ்வுக்கும், நாட்டில் சமாதானத்துக்கும் செயல் பூர்வமான தலைவராக

பேற்றுள்ள இ. தொ. கா உறுப்பினர் சதாசிவத்தின் பதவியேற்பு வைபவத்திலேயே அவர் இவ்வாறு தெரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசைக் கைப்பற்றும் எண்ணம் எமக்கில்லை

### தொண்டமான் தெரிவிப்பு

நாம் கடந்த பத்து இருபது வருடங்களாக ஐ. தே. க விற்கு ஆதரவு அளித்து வருகிறோம். ஒருங்கிணைந்தும் செயற்பட்டுள்ளோம். எம்மிடம் பரஸ்பர புரிந்துணர்வு உள்ளது. நாம் சிறுபான்மையினர் என்பது எமக்கு தெரியும் என அமைச்சர் தொண்டமான் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

நாம் அரசைக் கைப்பற்றும் எண்ணம் எதுவும் கொண்டிருக்கவில்லை. நாம் பெரிய அரசியல் ஆட்சி ஒன்றுடன் இணைந்து செயற்படுகிறோம் என்றும் அவர் கூறியுள்ளார்

## அரச ஊழியர் லீவுகள் 8 முதல் 19 வரை ரத்து

(கொழும்பு)

தேர்தல் சீராக நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறு சகல அமைச்சு செயலாளர்களும் ஜனாதிபதியால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நவம்பர் 30ஆம் திகதி வரை அரசாங்க ஊழியர்களின் சகல இடமாற்றங்களும் இடை நிறுத்தி வைக்கப்பட வேண்டும எனவும், ஒகஸ்ட் 8ஆம் திகதி முதல் 19ஆ திகதி வரை அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்கப்படமாட்டாது எனவும்

மருத்துவ சிகிச்சை, கல்வித் தேவை தவிர்ந்த பிறகாரணங்களுக்காக வெளிநாடு பயணங்களை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட மாட்டாது எனவும் அவ் அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொது ஜன ஐக்கிய முன்னணியின்

## தேசிய பட்டியலில் ...ருநர் சர்வானந்தா?

(கொழும்பு)

...ாகணசபை முன் ...ருநர் எஸ். சர்வா ...ந்தாவரும் பொதுத் ... பொது ஜன ஐக் ...ணணி சமர்ப்பிக்கும் ...யலில் இடம் ...க கொழும்பு ...ாரங்கள் தெரிவிக்கின்றன

இவர் இப்பட்டியலில் முதல் பிரதிநிதியாக காணப்படுவசாகவும், இது தொடர்பான செய்தியை முழுமையாக ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் சின்னத்திலும், ஏனைய பகுதிகளில் முஸ்லிம் காங்கிரஸ் பொதுஜன ஐக்கிய முன்னணி சின்னத்திலும் போட்டியிட இணக்கம் கண்டுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் ஒரு பொது உடன்பாட்டுக்கு வந்துள்ளதாக பி. பி. ஸியின் சிங்கள சேவை சந்தேசியவின் கொழும்புச் செய்தியாளர் எல். மோ. பெர்னான்டோ தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர்கள் முஸ்லிம் காங்கிரசின் சின்னத்திலும் ஏனைய பகுதிகளில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் பொது ஜன ஐக்கிய முன்னணியின் சின்னத்திலும் போட்டியிடுவது என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தமொன்றும் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார் பாராளுமன்ற தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யும் தினம்நெருங்கிவரும் இவ்வேளையில் கூட்டுக்கள் தொடர்பான பேச்சுக்களும் உடன்பாடுகளும் துரிதமாக இடம் பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐ.தே.க. அரசியல்வாதி உறவினருக்கு ஆயுதவிற்பனையாளர் 13பில். கடன்

### சீனித் தொழிற்சாலை நிறுவ வழங்கினர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி அரசியல் வாதி ஒருவரின் உறவினர் ஒருவர் 13 பில்லியன் இலங்கை ரூபாவிற்கு சமமான பணத்தை வெளிநாட்டு தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து கடனாக பெற்றுள்ளதாக வர்த்தக வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. இந்த கடனுதவி தென்கிழக்கு ஆசியாவில் உள்ள சிறிலங்காவிற்கு ஆயுதங்களை விநியோகிக்கும் அமைப்பினூடாக வழங்கப்பட்டுள்ளது. இக் கடனுதவி மூலம் மொனராகலையில் சீனித்தொழிற்சாலை நிறுவத் திட்டமிடப்பட்டதாகவும்கூறப்படுகிறது.

இத் திட்டத்திற்காக மேற்படி நபர் மத்திய வங்கியிடமிருந்து கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு அங்கீகாரமும் பெற்றுள்ளார் தனியார் நிறுவனங்களுக்கு மத்திய வங்கி கடனுதவி வழங்குவதில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்படி கடனுதவி அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள கம்பனி ஒன்றினூ

(6ஆம் பக்கம் பார்க்க)

## 350 கிலோ வெடிமருந்துடன் கொழும்பில் வாகனம் கண்டுபிடிப்பு

கொட்டாஞ்சேனை ஆலயமொன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்றிலிருந்து நேற்று முன்தினம் இரவு 350 கிலோ கிராம் எடையுள்ள வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. மத்திய புலனாய்வுப் பிரிவினர் இதைக் கண்டுபிடித்ததாக அமைச்சு மேலும் கூறியது.

நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படும் இடமொன்றில் நின்ற எல்வ். வானிலிருந்து இவ் வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து சிறிலங்கா பொலிசார் கூறுகையில்: மிகவும் பாதுகாப்பான வகையில் 13 உலோகத் தகடுகளினால் இக் குண்டு வானில் இருபக்கமும் பொருத்தப்பட்டிருந்தது எனவும் உடனடியாக வெடிக்கச் செயவதற்கு 2 சுவிச்சுகள் பொருத்தப்பட்டிருந்தன எனவும் மேலும் தூரத்திலிருந்து இயக்கி குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கச் செய்வதற்

( 6ஆம் பக்கம் பார்க்க)

மடைந்து யாழ்- போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்-

இவர் ... காயமடைந்தார் எனவும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மீளக் குடியேற்றம் என்ற போர்வையில்

## அம்பாறை மாவட்டத்தில் சிங்களவருக்கு குடியிருப்பு

அம்பாறை மாவட்டத்தில் மீளக் குடியேற்றம் என்னும் போர்வையில் சிங்கள மக்களுக்கு வீடுகள் அமைத்து நிரந்தரக் குடியேற்றங்கள் அமைக்க அரசினால் உதவி வழங்கப்படுகின்றது.

புலுக்குணாவ, குரும்பகஸ்கராவ, அறந்தலாவ ஆகிய பிரதேசங்களில் இத் திட்டம் அமுல் செய்யப்படுகின்றது. காணிகள் வழங்கப்பட்டு குடியேற்றங்கள் அமைக்கவும் உதவி வழங்கப்படுகின்றது. புலுக்குணாவ, கிராமத்தில் 168 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன- இக் குடியேற்ற வாசிகளுக்கு விமானப் படையினர் உதவிகளை வழங்கி வருகின்றனர்-

இதற்கான நிதி அரசினால் வழங்கப்படுகின்றது- நீர், மின்சார வசதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன-

## வடக்கில் எக்கட்சியும் தேர்தலில் போட்டியிடாது

### குமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் எந்த தமிழ்க் கட்சியும் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை- ஏனெனில் அது போர்வலயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அங்கு தேர்தல் அல்லது பிரசார நடவடிக்கை எதையும் மேற்கொள்ளமுடியாது என அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ்கட்சித்தலைவர் குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

வடக்கில் தேர்தல் நடைபெறுமானால் தேர்தல் குழப்பப்படலாம் இதைவிட அங்கு தேர்தல் நடைபெறக்கூடிய சாத்தியமில்லை எனவும் அவர் கூறினார்- கிழக்கில் தமிழ் சிறுபான்மையினரின் வாக்குகள் சிதறலாம் என குமார் பொன்னம்பலம் குறிப்பிட்டார்-

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவிதுள்ளனர்.

## 9 - க்கு முன் ஒப்படைக்கவும்

கல்விப் பொதுத் தராதர சாதாரண தாப்பரீட்சை1994 க்கான பூரணப்படுத்திய பிரவேச அட்டவணைகளை தங்கள் கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளரிடம் எதிர்வரும் 9 - ம் திகதிக்கு முன் கையளிக்

(6ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்

### மிருதங்கம்

ஒரு மிருதங்கத்துக்கு சாதம் போட ரூபா 100. புதிய மிருதங்கங்கள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்- சோவிந்தபிள்ளைவிஜயகுமார் 192/1 நாவலர் வீதி பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம். (8678)

### விற்பனைக்கு

சுன்னாகம் நகரத்திலிருந்து 1/4 மைல் தூரத்தில் அமைந்த முத்துகிருஷ்ணர் வீதியில் கிணற்றுடன் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தெ.பாலசுப்பிரமணியம் புங்கடி புலோலி தெற்கு புலோலி. (8700)

### A/L இந்துசமயம் 9 வருட வினாத் தாள்கள்

இந்துசமயம் கடந்த கால 9 வருட வினாத்தாள்களின் தொகுப்பு (பகுதி I பகுதி II) சகல பிரபல புத்தக நிலையங்களிலும் விற்பனைக்கு வந்து விட்டது. (8704)

### ஓராண்டு நிறைவு

சங்கானை நிச்சாமம் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் ஓராண்டு நிறைவு விழா இன்று மாலை நான்கு மணியளவில் நிச்சாமம் விக்னேஸ்வர வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது. சங்கானை கல்விக் கோட்ட மாணவரமைப்பு பொறுப்பாளர் செல்வி த. வலம்புரி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோட்டக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

### வருடாந்த உற்சவம் ஆரம்பம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சிவன்கோவிலின் இரதோற்சவம் எதிர்வரும் 13 ம் திகதியும்(13-7-94) தீர்த்தோற்சவம் 14 ம் திகதியும் நடைபெறுகின்றன. இவ் ஆலய வருடாந்த மகோற்சவங்கள் கடந்த 29 ம் திகதி

# தொண்டாவுடன் கூட்டுச்சேர சந்திரசேகரன் தயார்!

(ஹட்டன்)

மலையக மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவும், எமது கொள்கைகளை அங்கீகரிக்க ஒத்துழைப்பும் அளித்தால் தொண்டமானுடன் அல்லது செல்லச்சாமியுடன் கூட்டுச் சேர தயாராகவுள்ளேன். இவ்வாறு மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் கூறியுள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் பொதுக்கூட்டமொன்றில் அவர்பேசுகையில், வடக்கில் ஒரு காலத்தில் இரு துருவங்களாக இருந்த ஜி ஜி. பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோர் மக்களின் பிரச்சினைகளை முன்வைக்கும் போது ஒன்றுபடவில்லையா? எனவே மலையக மக்களின் பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக முடிவுகாண வேண்டுமானால், மலையக மக்கள் ஒன்றுபட வேண்டும், அதன் மூலம் தலைவர்கள் ஒன்றுபடுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

## கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

உடுவில்-சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு ஏழு முதல் பதினொன்று வரையான வகுப்புகளில் ஆங்கிலக் கல்விகற்பிப்பாருக்கான கருத்தரங்கும், செயலமர்வும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது (21)

# மகப்பேற்றிற்கு 84 நாள் லீவு பெற உரிமை உண்டு

## மகாசிவம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பயிலுநர் ஆசிரியர், பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் மற்றும் நிரந்தர ஆசிரியர்கள் அனைவருக்கும் முதல் இரு மகப்பேற்றுக்கும் 84 வேலை நாட்கள் மகப்பேற்று லீவாகவும், ஏனைய மகப்பேறுகளுக்கு 42 வேலைநாட்கள் மகப்பேற்று லீவாகவும் பெற உரிமை உண்டு என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் த. மகாசிவம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் யாழ்ப்பாண பிராந்தியத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இருவருக்கும் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில், 84 நாள் மகப்பேற்று லீவு பெற்றமைக்காக சம்பளமற்ற லீவு வழங்கப்பட்டிருப்பின் அதை மீளப்பெற்று கழிக்கப்பட்ட சம்பளம் திரும்ப வழங்கப்பட வேண்டுமெனவும், பயிலுநர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கும் விண்ணப்பங்களில் தேவையான மாற்றங்கள் செய்யப்படவேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக கல்வித் திணைக்களம் 1990-ல் வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தின் பிரதிகளையும் கல்விப்பணிப்பாளர்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார்.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

COUNCIL OF NGOO JAFFNA

## பதவி வெற்றிடம்

### நிர்வாக அலுவலர் (Administrative Officer)

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு ஒரு நிர்வாக உத்தியோகத்தர்

## குழந்தைகள் மகிழ்வு விழா

வீரவேங்கை சிவமூர்த்தி நினைவு முன்பள்ளியின் குழந்தைகள் மகிழ்வு விழா நாளை பிற்பகல் இரண்டு மணியளவில் யாழ். புங்குடுதீவு மேற்கு அ.மி. வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.ப. திலகநாயகம் போலும், கௌரவ விருந்தினர்களாக பிரதி கல்வி பணிப்பாளர் இ. சிவானந்தன், வளன் ஆச்சிரமத்தின் தவத்திரு. ஜெ கி. ஜெபசீலன், வேலணை உதவி அரச அதிபர் பணிமனையைச் சேர்ந்த வ ஆ. பாலசுப்பிரமணியம், தொலைக் கல்வி நிலைய முதன்மை விரிவுரையாளர் எஸ்.ஓங்காரமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் - யாழ் மாவட்டம்

உறுப்பினர் கவனத்திற்கு:

1) 01-07-94 முதல் நடைமுறையிலுள்ள ஒழுங்கு விதிகள் தங்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும். [ஏற்கனவே கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது]
2) பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் யூலை 6-ம் திகதி முதல் செம்மணி வீதியிலுள்ள மாவட்டக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
3) சந்தாப்பணம் செலுத்தாதவர்கள் மீது யூலை 10-ம் திகதி முதல் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது நிலுவைகளைப் பகுதியாகச் செலுத்தவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.
4) தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்கு மேல் சமூகம் கொடுக்காதவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
5) யூலை 5-ம் திகதி பொது விடுமுறை தினமாகும்.

பொதுச்செயலாளர்
யாழ் மாவட்டம்

(சி-9721)

## 45ம் நாள் நினைவு



### கப்டன் சாமந்தி / சஞ்சிகா

(தங்கராசா சுதர்ஜினி)

ஜனனம்: 29 - 03 - 1975

வீரச்சாவு: 19 - 05 - 1994

உரும்பிராயின் உத்தமியே சுதர்ஜினி
சரித்திரத்தில் உந்தன் பெயர் சாமந்தியோ
பயிற்சிக்கு சென்ற படகுதனை
பாதகர்கள் அலைகடலில் மறித்தனரோ
அறுவருடன் நீயும் ஆழ்கடலில் மோதினாயோ
விடியும் வரை காத்திருந்தோம்
விடிந்த பின்னும் நீ வராமல்
ஒப்பற்ற தியாகிகளின் வரிசையில்

## நினைவு கூருகின்றோம்...

### 02. 07. 1994

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய,

★ **சாந்தன்** (நாகராசா சாந்தரூபன் மாவடிச்சேனை, மூதூர் - திருமலை)

கிளி - பரந்தன், முரசுமோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

முரசுமோட்டைப் பிரதேசப் பொறுப்பாளரான,

**குமாரதாஸ்** (கந்தையா குமாரதாஸ் - பன்றிசுட்டான், கண்டாவளை, பரந்தன் - கிளிநொச்சி)

1988ஆம் ஆண்டு வன்னேரிக்குளம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சமுத்திரன்** (இராமநாதன் மனோகரராசா - வன்னேரிக்குளம்)

1989ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய,

**சுதா** (சீ. ஜெயக்குமார் - யாழ்ப்பாணம்)

வவுனியா- தோணிக்கல் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்,

1990ஆம் ஆண்டு காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**பரணி** (இரத்தினம் சுரேந்திரன் - துறைமுகம், மடத்துவளவு, காரைநகர் - யாழ்)

அம்பாறை - அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப்படையினரால் ரயர் போட்டு எரித்துக் கொல்லப்பட்ட பொத்துவிலைச் சேர்ந்த 2 தமிழர்கள். இதே மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பெண், இளைஞன் உட்பட 04-ம் கொலனியைச் சேர்ந்த 03 தமிழர்கள்.

மட்டுநகரில் சுற்றிவளைப்பினை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நொச்சிமுனையைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மன்னார் - ஓலைத்தொடுவாய்ப் பகுதியில் சிறிலங்கா ராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**லெப். காளி** (அ. புவிராஜசிங்கம் - நாவற்காடு, கரவெட்டி - மட்டு)

**கப்டன் பரிது** (சிமியோன் அல்பிரட் கமலிய - ஓலைத்தொடுவாய் - மன்னார்)

**லெப்.பரமேஸ்** (க. உதயகுமார் - நல்லூர், பூநகரி - மன்னார்)

**வதனன்** (தானியூஸ் ஜேம்ஸ்பீரிஸ் - வங்காலை - மன்னார்)

திருமலை - பேராற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**மோகன்** (வீரக்குட்டி அருட்செல்வம்- 9-ம்கொலனி, தம்பலகமம் - திருமலை)

**ராஜு** (கறுப்பையா கனகராசா - கன்னியா-திருமலை)

**சிறில்** (சைமன் மாத்தூஸ் - செல்வநாயகபுரம்

யும் நடைபெறுகின்றன. இவ் ஆலய வருடாந்த மகோற்சவங்கள் கடந்த 29 ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது உற்சவ காலங்களில் தினமும் மாலை வேளையில் கந்தர்மடம் சிவ. வை. நித்தியானந்த சர்மாவின் இசைச் சொற்பொழிவுகளும் இடம் பெற்றுவருகின்றன.

(25)

## பாலர் சோலையில் விளையாட்டுவிழா

நாவலர் பாலர் சோலையில் மூன்றாவது வருடாந்த விளையாட்டு விழா நாளை பிற்பகல் 1.30 மணியளவில், நீராவியடி, நாவலர் ஆச்சிரம மண்டப மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை ஆசிரியை செல்வி ஜெயந்தினி பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்ச்சியில், பிரதம விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் இ. மகேந்திரனும், சிறப்பு விருந்தினராக பாலர் கல்விக் கழகத் தலைவர் ஆ. செல்லையாவும், கௌரவ விருந்தினராகமட்டு. அம்பாறை தொடர்பகப் பொறுப்பாளர் அருணகிரியும் கலந்து கொள்ளவுள்ளனர்.


## இறைச்சி கோழி

சுத்தப் செய்தும் முட்டைகளும் எந்நேரமும் பெற்றுக்கொள்ள

**சுவை யருவி**

கோழிப் பண்ணை
யாழ்ப்பாணம்
(சி-9882)



## நிர்வாக அலுவலர் (Administrative Officer)

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு ஒரு நிர்வாக உத்தியோகத்தர் (Administrative Officer) தேவை

வயது 30 — 45; கல்வித் தகைமை — க. பொ த. (உ•த) அல்லது சமமானது· குறைந்தது 5 வருட நிர்வாகத் திறன், தகவல் பரிமாறல், கணக்கியல், அலுவலக ஒருங்கிணைப்பு, முகாமைத்துவம், தமிழிலும் ஆங்கிலத்திலும் போதிய தேர்ச்சி முக்கியம்.
— சம்பளம் -- பேசித் தீர்க்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி :- 10 - 07 - 1994
100, சீலன் வீதி, இராசாவின் தோட்டம்
யாழ்ப்பாணம்.

-- செயலாளர்

(சி-9718)



## துவிச்சக்கர வண்டிக்கான முற்பணம்

பண்டத்தரிப்புப் பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு மட்டும்.

துவிச்சக்கர வண்டி தேவைப்படுவோர் 10-7-94-ந் திகதிக்கு முன்னர் ரூபா 4000/- முற்பணம் செலுத்தித் தலைமை அலுவலகத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**பண்டத்தரிப்பு பரிஷ். ப. நோ. கூ. சங்கம்.**

(சி-9722)



## இணைப்பாளர்கள் தேவை

நல்லூர், யாழ். கோட்ட தனியார் கல்வி நிலையங்களை மேற்பார்வை செய்வதற்கு இணைப்பாளர்கள் தேவை- தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில், க. பொ. த. (சாதாரண | உயர் தர) வகுப்பில் சித்தியடைந்தவர்கள் 6-7-94 புதன்கிழமைக்கு முன்னதாக விண்ணப்பங்களை தனியார் கல்வி நிர்வாகப்பிரிவு இல 19, செம்மணி வீதி, நல்லூர். என்ற முகவரிக்கு அனுப்பவும்- நேர்முகப் பரீட்சை 8-7-94 வெள்ளிக்கிழமை மு ப 10 மணிக்கு அலுவலகத்தில் நடைபெறவிருப்பதால் தேவையான ஆவணங்களுடன் சமுகம் தரவும்

**யாழ். மாவட்ட நிர்வாக இணைப்பாளர்.**

(சி-9723)


விடியும் வரை காத்திருந்தோம்
விடிந்த பின்னும் நீ வராமல்
ஒப்பற்ற தியாகிகளின் வரிசையில்
உன்னையும் நீ இணைத்துக் கொண்டாய்
நாட்கள் தான் நாற்பத்தைந் தானாலும்
நாம் மறவோம் உன் நினைவை
தொடர்வோம் உன் சுவடுகளை.

இவருடன் வீரச்சாவை தழுவிக்கொண்ட ஏனைய போராளிகளுக்கும் இந் நாளில் எமது அஞ்சலியை செலுத்துகின்றோம்.

**குடும்பத்தினர், நண்பர்கள்.**

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(8702)

உ

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



அமரர்

## ஞானலக்ஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி B.A

(ஆசிரியை, யா/ மங்கையர்க்கரசி வித்தியாலயம்)

அன்புடையீர்!

எமது குடும்பத்தின் அன்புமகளாய் வாழ்ந்து 03-06-1994 அன்று சிவப்பேறுபெற்றஎங்கள் 'ஞானா' வின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 04-07-1994 திங்கள் முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

தாங்கள் அனைவரும் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஜீ தயவு செய்து இவ் அழைப்பினைத் தனித்தனி அழைப்பாக ஏற்குமாறு வேண்டுகிறோம்.

''அம்பாள் அகம்''
மருதனார் மடம்,
இணுவில்.

(8701)

தாயார், கணவர், மாமன், மாமி,
சகோதரர், மைத்துனர்,
மக்கள், மருமக்கள்.

**ராஜு** (கறுப்பையா கனகராசா - கன்னியா- திருமலை)

**சிறில்** (சைமன் மாத்தூஸ் - செல்வநாயகபுரம் திருமலை)

**குமாரன் (- - -)**

திருமலை-இறால்குழி, இத்திக்குளம், மரவட்டைக் குளம், நெய்யத்திக்குளம். உப்புவெளிப்பகுதிகளைச் சுற்றிவளைத்த கட்டைபறிச்சான், தோப்பூர் முகாம்களைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினரால் உப்புவெளியில் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பொதுமகன்.

1992-ம் ஆண்டு வெற்றிலைக்கேணியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.பானுமதி** (தர்சினி சிறியானி புஸ்பநாதன்-54/57 கச்சேரி, நல்லூர்வீதி-யாழ்)

வவுனியா-பேயாடிக்குளம் காவலரண் பகுதியில் வாகனங்கள் சோதனையிடப்பட்டுக் கொண்டிருக்கும் போது பொதுமக்கள் மீது தேசவிரோதசக்திகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில்பலியான சுண்ணாகம் பகுதியைச் சேர்ந்த சாரதி ஒருவர்

1993-ம் ஆண்டு மட்டு - காஞ்சிரக்காட்டுப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**லெப்.கவிதீஸ்வரன்-நிலான்** (சிவானந்தன் கருணைநாதன் ஊற்றுச்சேனை-மட்டு)

**லெப்.செந்தில்** (வேலுப்பிள்ளை செல்வம்-சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை- மட்டு)

**2-ம் லெப்.விஜயநாதன்-விஜி** (முத்துவேல் மேகநாதன்-சந்திவெளி-மட்டு)

**2-ம் லெப்.உமாரமணன்-லோகிதன்** (சின்னத்தம்பி பூபாலப்பிள்ளை-வாகனேரி-மட்டு)

**2-ம் லெப்.சிவனேந்திரன்-பிரதீபன்** (விஜயரட்ணம்-ரமேஸ்காந்-கல்லடி-மட்டு)

**பாலசிங்கம்-சௌந்தரன்** (மகாலிங்கம் யோகராசா-கண்ணகிபுரம்-மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9715)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# வெற்றிக்கு துணை நின்ற 13 கரும்புலிகள்

கடந்த வருடம் நவம்பர் மாதம் 11-ம் திகதியன்று தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டு சரித்திர நிகழ்வாகிவிட்ட பூநகரித் தளமீதான தவளை இராணுவ நடவடிக்கையின் போது அத்தாக்குதலுக்கு பக்கத் துணையாகி பலாலி இராணுவத்தளத்தினுள்ளே கரும்புலிகளாக புகுந்து சிறிலங்கா இராணுவத்திற்கு பேரிழப்பை ஏற்படுத்தியதுடன் எதிரிக்கு பேரதிர்ச்சியையும் ஏற்படுத்தி பூனகரி வெற்றிக்கு பெரும் பங்காற்றிய 13 கரும்புலிகள்.


மேஜர் தொண்டமான்
கண்ணப்பர் நல்லதம்பி


மேஜர் கலையழகன்
பொன்னையா பேரின்பராசா



கப்டன் சிவலோகன்
சின்னத்தம்பி அருளானந்தம்


கப்டன் மதிநிலவன்
கணபதிப்பிள்ளை தவராசா



கப்டன் கரிகாலன்
இரத்தினசிங்கம் பிரபாகரன்


கப்டன் ஐயனார்
செல்வநாயகம் ராசசேகரம்












கப்டன் சீராளன்
ஞானப்பிரகாசம் குணம்



கப்டன் செந்தமிழ் நம்பி
செல்லத்துரை ஜெகன்



லெப்ரினன்ட் ஜீவரஞ்சன்
கிருஸ்ணபிள்ளை முருகுப்பிள்ளை



லெப்ரினன்ட் வீரமணி
தெய்வேந்திரம் சுதாகர்



லெப்ரினன்ட் நல்லதம்பி
தங்கராசா கோகுலநாதன்



லெப்ரினன்ட் செங்கண்ணன்
செந்தூர்பாண்டியன்



லெப்ரினன்ட் கண்ணன்
நவரட்ணம் நேசகுலேந்திரன்

இவர்களுக்கு
தமிழீழ
விடுதலைப்
புலிகள் தங்கள்
வீர வணக்கத்தை
செலுத்திக்
கொள்கின்றனர்

## "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

# எழுதுவினைஞர் பரீட்சை முடிவு வெளிவந்துள்ளது

(கொழும்பு)

1993இல் நடைபெற்ற அரசாங்க பொது எழுதுவினைஞர் சேவை இரண்டாம் வகுப்பு 'அ' பிரிவு உத்தியோகத்தர்களை முதலாம் வகுப்புக்கு உயர்த்துவதற்கான பரீட்சையில் 35 தமிழ்மொழி மூல உத்தியோகத்தர்கள் சித்தியடைந்துள்ளனர். அவர்களில் யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவானோர் வருமாறு;

இ. கணேசானந்தராஜா (வலிகாமம் வடக்குப் பிரதேச சபை), பி. ராஜகோபாலன் (சண்டிலிப்பாய் செயலாளர் பிரிவு), சே. நாகராஜா (நல்லூர் பிரதேச செயலாளர் அலுவலகம்), கே. கார்த்திகேசு (தேர்தல் அலுவலகம்), ஏ.ஏ. நடராசா (குடத்தனை உப அலுவலகம், பருத்தித்துறை பிரதேச சபை), ஏ. நாகேஸ்வரி (சாவகச்சேரி நகரசபை) கே.பழனிநாதன் (உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், திருநெல்வேலி), கே. முருகையா (மாவட்ட செயலாளர் அலுவலகம், வடமராட்சி), எஸ். மகாலிங்கம் (தொழினுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்). கே இராமச்சந்திரன் (மாவட்டக் கல்வி அலுவலகம்) ஆகியோரே சித்தியடைந்தவர்களாவர்.

## வெள்ளிவிழா

இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளை எதிர்வரும் திங்கட்கிழமையன்று தனது வெள்ளிவிழாவைக் கொண்டாட இருக்கிறது. கிளை முகாமையாளர் எஸ். விக்னராஜா தலைமையில் நடைபெறவிருக்கும் வெள்ளிவிழா நிகழ்ச்சிகளில் யாழ் பிரதேச முகாமையாளர் கே. கணேசமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். வெள்ளி விழாவை முன்னிட்டு மதத் தலைவர்களின் ஆசியுரைகளும், வாடிக்கையாளர்களின் வாழ்த்துரைகளும் இடம்பெறவுள்ளது.

# கஞ்சாவுடன் இராணுவம் பொலிசாரால் கைது

(மாத்தறை)

கஞ்சா பார்சலுடன் வந்த இராணுவ வீரரை பொலிசார் கைது செய்த சம்பவமொன்று வெள்ளவாயாப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இராணுவ முகாமொன்றிலிருந்து தப்பி வந்த இந் நபர் கஞ்சா வியாபாரத்திலீடுபட்டதாகவும் தெரிய வருகின்றது. கைது செய்யப்பட்டவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## புனித சின்னப்பர் பெருவிழா

கொக்குவில் புனித சின்னப்பர் ஆலயத்தின் புனித சின்னப்பர் பெருவிழாவின் இன்றைய நிகழ்ச்சியில், பிற்பகல் ஐந்து மணியளவில் ''கிறிஸ்துவின் திருஉடலும், திருஇரத்தமும் குழும வாழ்வின் திருஊற்று'' என்னும் பொருளில் அருட் திரு ஜீவா போல் மறையுரை நிகழ்த்தவுள்ளார். அதைத் தொடர்ந்து நற்கருணைப் பவனியும் இடம்பெறும்.

## மேலும் 1000 பீப்பா தார்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு வீதித் திருத்த வேலைகளுக்கென மேலும் ஆயிரம் பீப்பா தார் ''மாகோ'' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளது.

தற்போது குடாநாட்டில் பல வீதிகள் திருத்தியமைக்கும் பணி நடைபெற்று வருவது தெரிந்ததே. இத் தார் பீப்பாக்கள் இறக்கப்பட்டதும் மேலும் பல வீதிகள் விரைவில் திருத்தியமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (சி)

## பால்மா விலை குறையும்

பால்மா இறக்குமதிக்கான தீர்வை 50 சத வீதத்தால் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து பால்மாவின் விலை கிலோவிற்கு 8 ரூபாவால் குறையும் என எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

## கல்விக் கண்காட்சி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய கல்விக் கண்காட்சி எதிர்வரும் 4-ம் திகதி அதிபர் திரு. ச. கந்தசாமி தலைமையில் நடைபெறுகின்றது. பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமதலைவர் சுவாமி சித்ரூபானந்தா மங்கள விளக்கேற்ற யாழ் கல்விப் பணிப்பாளர் (வலயம் 2) திரு க. கந்தசாமி கண்காட்சியைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பார். (26)

## மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாண கல்விப்பிராந்திய வலயம் ஒன்றிற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணியளவில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக ஒலிம்பிக் வீரர் கலாநிதி நா. எதிர்வீரசிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கிராம வளர்ச்சி நோக்கில் ச. ச. நி. செயற்பட வேண்டும்

- மறைத்திரு ஜெயக்குமார்

(கொழும்புத்துறை)

''ஒவ்வொரு கிராமங்கள், மாநகர சபை, பட்டினசபை, நகரசபைகளிலும் இயங்கும் சகல சனசமூக நிலையங்கள் அப்பகுதியின் பல்வேறு தேவைகளையும் முழுமனதுடன் செயற்பட்டு நிறைவேற்றி வைக்க முன்வர வேண்டும். கிராம அபிவிருத்தி, சமூக ஒற்றுமை, பொதுநலத் தொண்டு போன்றவற்றில் சனசமூக நிலையங்களின் செயற்குழுவினர்கள் மிகவும் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.''

இவ்வாறு கொழும்புத்துறை எழிலூர் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற மாதாந்தக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராக பங்குபற்றிஉரைநிகழ்த்திய பாஷையூர் பங்குத் தந்தை மறைத் திரு. க. ஜோ. ஜெயக்குமார் கூறினார்.

நிலையப் போஷகர் திரு. வி. பெனடிக் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சில சனசமூக நிலையங்கள் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. ஆனால் சில சனசமூக நிலையங்கள் பெயரளவில் மட்டும் இயங்கி அரசாங்க நன்கொடை மட்டும் பெற்று வருகின்றன. சில சனசமூக நிலையங்கள் ஆட்டுக் கொட்டில்களாகவும், மது அருந்தும் நிலையங்களாகவும் மாறி வருகின்றன. இது மிகவும் வேதனைக்குரியது.

சனசமூகநிலையங்கள் கிராமத்தில் அளப்பரிய பணிகளைச் செய்ய முடியும். விளையாட்டுத்துறையில் ஆற்றல்களை வளர்க்கவும் சமயத்துறையில் ஈடுபாட்டை ஏற்படுத்தவும், பாலர் பாடசாலைகள், சுகாதார சிகிச்சை நிலையங்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்யவும் இந்நிலையங்கள் பெரிதும் உதவ முன்வர வேண்டும்'' என்றார்.

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் நிர்வாகச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா உரையாற்றுகையில் 'சனசமூக நிலையங்கள் மூலம் இளம் சமுதாயத்தினர் சமய-சமூகப் பணிகளைச் செய்ய முன் வரவேண்டுமென்றும், இன்றையஇக்கட்டான காலகட்டத்தில் நாம் எல்லோரும் ஒருதாய் வயிற்றுப்பிள்ளை போன்று ஒன்றுபட்டுச் செயல்பட முன்வர வேண்டுமென்றும், சில மக்களின் உள்ளத்தில் இன்று எரிச்சல், பொறாமை, கரவு, வஞ்சகம், சூது என்னும் பஞ்சமா பாதகம் தாண்டவமாடுகிறது என்றும், இந்த இழிகோலமான செயல்களை உள்ளத்தில் இருந்து அகற்றி ஒவ்வொருவர் உள்ளத்திலும் புனிதமும், தெய்வ சிந்தனையும் வேரூன்றி சகலரது மனதிலும் நல்ல எண்ணம், நல்ல சிந்தனை, நல்ல நோக்கம், நல்ல செயற்பாடு, நல்ல தத்துவங்கள் உருவாகிப் புனிதமான தெய்வ சிந்தனை உள்ள தன்னலமற்ற சேவை உள்ளம் கொண்ட ஒரு புனிதமான சமய - சமூக சேவையாளர்களை உருவாக்க சனசமூக நிலையங்கள் யாவும் அயராது உழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் எழுத்தாளர் திரு. யோசப்பாலா, பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எஸ். அமலதாஸ் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (24)

# யாழ். மாணவர்களுக்கு கல்லூரி அனுமதி மறுப்பு

## தேசிய போட்டியில் பங்குபெறவில்லையாம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா கல்விக் கல்லூரிக்கு 'உடற் கல்வி' பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சைக்குசென்றவர்களில் யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த பலர் பயிற்சி நெறிக்கான தகுதியைக் கொண்டிருக்கவில்லை என்ற காரணத்திற்காக பயிற்சி நெறியைத் தொடர்வதற்கு அனுமதியளிக்கவில்லை என தெரிய வருகிறது:

இது குறித்துமேலும் தெரிய வருவதாவது: நேர்முகப் பரீட்சையின் போது தேசிய ரீதியில் நடைபெற்ற போட்டிகளில் பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் கேட்கப்பட்டதாகவும் யாழ். மாவட்டத்திலிருந்து நேர்முகப் பரீட்சைக்குச்சென்றோர்களில் பெரும்பாலானோரிடம் மேற்படி சான்றிதழ் இல்லாமையினால் அவர்கள் பயிற்சி நெறியில் இணைந்து கொள்வதற்கு அனுமதியளிக்கவில்லை எனவும் தெரியவருகிறது.

மேற்படி கல்விக் கல்லூரி, பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கானபயிற்சி நெறிகள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகும் எனவும் தெரியவருகிறது.

## மாதாந்த இசை நிகழ்ச்சி

(குருநகர்)

யாழ் திருமறைக் கலாமன்றப் பிரதான வீதி அரங்கில் இன்று மாலை 6.45 மணிக்கு கவின் கலைகள் பயிலகம் வழங்கும் மாதாந்த இசை நிகழ்ச்சி நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக வண. சாள்ஸ் கொலின் அடிகள், வைத்திய கலாநிதி ஆ. ஸ்ரீபத்மநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர். (21)

## கருத்தரங்கு

(பருத்தித்துறை)

தேசிய சேமிப்பு வங்கி பருத்தித் துறைக்கிளையும் வட இலங்கை சர்வோதய இயக்கமும் பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமும் இணைந்து ''சமூக வாழ்க்கையில் சேமிப்பும் சிக்கனமும்'' பற்றிய இரு நாள்கருத்தரங்கை நேற்றும் இன்றும் பருத்தித்துறை வீரவாகு கட்டட மேல் மாடியில் நடாத்துகின்றன. தேசிய சேமிப்பு வங்கி பருத்தித்துறை கிளை முகாமையாளர் திரு க. கமலசேகரம் தலைமை தாங்குகிறார். ''ஆத்மீகபாதையில் சேவைகள்'' பற்றி சுவாமி சித்ரூபானந்தாவும் 'சர்வோதய வழிகளில் சேவைகள்'' பற்றி திரு க. திருநாவுக்கரசுவும், பூமித்தாயின் செல்வங்கள் பற்றி திரு. இ. சந்திரசேகரசர்மாவும் ''வாழ்வு வளம் பெற சுய தொழில் முயற்சி'' பற்றி பனை அபிவிருத்திச்சபை திட்ட இணைப்பாளர் திரு ஜீ. தங்கவேலும், கல்வியும் செல்வமும் பற்றி அச்சுவேலி மகாவித்தியாலய அதிபர் திரு. க இராசதுரையும் நோய்களை அறிந்துகொள்ளுங்கள் பற்றி டாக்டர் மு. க. முருகானந்தனும் யோகப் பயிற்சியும் உடல் ஆரோக்கியமும் பற்றி திரு. மா. இரத்தினசோதியும், கைகண்ட மருந்து பற்றி டாக்டர் செ. சுந்தரமூர்த்தியும் ''சமுதாயத்தின் வீண் விரயம்'' பற்றி தொழிலதிகாரி திரு. ஆ. பசுபதியும் சிக்கன வாழ்க்கையில் குடும்பத் தலைவி பற்றி அதிபர் திருமதி ந. சுந்தரலிங்கமும் 'உலகமும் வங்கியியலும்' பற்றி யாழ் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவத் துறைத் தலைவர் திரு. மு. நடராஜசுந்தரமும் ''வர்த்தக வங்கிகளின் கிராமிய சமூக நடவடிக்கைகள்'' பற்றி பருத்தித்துறை இலங்கைவங்கி முகாமையாளர் திரு வி. தில்லைநாதனும் சேமிப்பு சாதனங்களின் சாதனைகள் பற்றி கரவெட்டி தபாலதிபர்

# காதலித்து கைவிட்டவருக்கு தண்டனை விதிப்பு

(வடமராட்சி)

காதலித்து கைவிட்ட குற்றத்திற்காக இளைஞர் ஒருவருக்கு பருத்தித்துறை தமிழீழ

இளைஞர் ஒருவர் காதலித்து கைவிட்டது தொடர்பாக பருத்தித்துறை காவல் துறையினர் நீதிமன்றில் இளைஞ

## 45-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்

24. 10. 1968

தாயக மண்ணில்

19. 5. 1994

## அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி நவிலலும்



## தண்டனை விதிப்பு

(வடமராட்சி)

காதலித்து கைவிட்ட குற்றத்திற்காக இளைஞர் ஒருவருக்கு பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றம் இருபதினாயிரம் ரூபா குற்றமும் ஒரு மாத சிறைத் தண்டனையையும் வழங்கியுள்ளது.

கரவெட்டி மேற்கு சாண்டில் குளத்தடியைச் சேர்ந்த யுவதி ஒருவரை கரவெட்டி சாமியன் அரசடியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காதலித்து கைவிட்டது தொடர்பாக பருத்தித்துறை காவல் துறையினர் நீதிமன்றில் இளைஞருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

மன்று விசாரணையின் பின்னர் அவரை குற்றவாளியாகக் கண்டு நீதியாளர் பிரதீபா இத்தண்டனையை வழங்கினார். (யோ)

## 5-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
4-2 1967

தாயக மண்ணில்
19 05-1994

### கடற்புலி கப்டன் கணேஸ்
(சோமசுந்தரம் ரவிச்சந்திரன்)

உன்னையே எருவாக்கி ... இந்த
மண்ணை நீ வளமாக்க
விண்ணிலே பறந்தாலும் -- இம்
மண்ணிலே மறையாது -- உன்
எண்ணமே எந் நாளும்.

02-07-1994 இன்று எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் நினைவு நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

இவருடன் வீரச்சாவு எய்திய கடற்புலி வீரர்களுக்கும் எமது இதயம் கனிந்த அஞ்சலிகள்.

செந்தூரன் வீதி, (றெஜி) மானிப்பாய். — பெற்றோர், சகோதரர்கள்.

(8697)



24. 10. 1968

தாயக மண்ணில்

19. 5. 1994

### கடற்புலி மேஜர் குணா/சாள்ஸ்
(திருநாவுக்கரசு நயசிவாயம்)

(ஊறணி காங்கேசன்துறை)

**சாள்ஸ் எனும் ஓவியம் கடலினிற் காவியமானது...**

மென்மைக்குள் மென்மை இவன் உள்ளம்
மெய்மைக்குள் பொய்மையில்லை இவன் வாழ்வு.
எங்கள் உள்ளத்தில் நிறைந்து நின்றவன் - கடல்
வெள்ளத்தில் கடற்புலிப் படகினில் வெஞ்சமராடியே
வென்று, சிங்களன் வீழ்ந்திட வீழ்ந்தான் வேங்கை.

பெற்றவனும், பெற்றவளும், உற்ற சகோதரரும்
தானிருக்க
அற்ப இன்பங் கொண்ட வாழ்வினைத் தான்துறந்து,
பெற்ற தன் நாடே பெரிதென்று புறப்பட்ட
வேங்கையிவன்

ஆண்ட தமிழனை அழித்தொழித்திட ஆயிரமாய்ப்
படைகளைத் திரட்டி எழுந்திட்ட துட்டகை
முனுவர்க்கு
சாள்ஸ் கொடுத்த சவுக்கடிகள் சரித்திரத்தில் அழியாது

எங்கள் விடுதலை வேருக்கு செந்நீரைக் தண்ணீராய்
வார்த்து நின்றவனை பாரதனில் பெரும் படையாம்
பாரதப் படைகள்
தாம் விரித்த வலையதனில் வீழ்த்த நினைத்தபோது
வரிப்புலி இவன் விழித்துக் கொண்டதனால்
விழவில்லை.

தாயகம் வந்திட்ட சாள்ஸ் தமிழன்னை துயர்நீங்க,
தவளைப் பாய்ச்சலில் மணலாற்று நாயகன்
அன்போடு பாய்ந்தான்
ஈற்றில் மணலாற்றுத் தொடர்பக மன்னனாய்
விளங்கி,
கடலன்னையின் மடியினில் வசந்தன், கணேஸ்,
மேனன், குகா,
மணாளன், சாமந்தியுடன் மீளாத துயிலில்
காவியமானான்.

இன்றைய தினம் நடைபெறும் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், சகபோராளிகள் அனைவரையும் அழைக்கின்றோம்.

தற்போதைய முகவரி:
புலோலி கிழக்கு,
சிவன்கோவில் கிழக்கு ஒழுங்கை,
பருத்தித்துறை.

- குடும்பத்தினர்.

(8684)

தக வங்கிகளின் கிராமிய சமூக நடவடிக்கைகள்'' பற்றி பருத்தித்துறை இலங்கைவங்கி முகாமையாளர் திரு வி. தில்லைநாதனும் சேமிப்பு சாதனங்களின் சாதனைகள் பற்றி கரவெட்டி தபாலதிபர் திரு ச.சிவராஜசிங்கமும் கருத்துரைகளை வழங்குவார்கள். (25)

## மெய் வல்லுநர் போட்டி

தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே யான மெய்வல்லுநர் போட்டி கடந்த வியாழக்கிழமை மட்டுவில் சந்திரபுரஸ் கந்தவரோதய மகாவித்தியாலய மைதானத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இதில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி 182 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் யா/மட்டுவில் ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம் 176 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.


இப்போட்டியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி 8 புதிய சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. (மு)

## பல்கலைக்கழக அணிக்கு வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக அணிக்கும் ஷப்றா அணிக்கும் இடையிலான ஹொக்கி ஆட்டத்தில் ஷப்றா அணி எவ்வித கோல்களையும் போடாத நிலையில் படுதோல்வியடைந்தது.

யாழ் பல்கலைக்கழக ஹொக்கி மைதானத்தில் இடம்பெற்ற இவ்வாட்டத்தில் பல்கலைக்கழக அணி 5-0 என்ற கோல் கணக்கில் வென்றது. இவ்வாட்டத்தில் பல்கலைக்கழக அணித் தலைவர் எஸ். நோபிள் சுரேந்திரன் 2 கோல்களையும், த. நரேஸ் 2 கோல்களையும், இ. ஜெயசீலன் ஒரு கோலையும் போட்டனர். (05)



## திரு.பொன். நாகரத்தினம்

(ஓய்வுபெற்ற அதிபர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யாழ். பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்)

**கண்ணில் மணியாய்:** 08 - 08 - 1929 **விண்ணில் அணியாய்:** 02 - 06 - 1994

2-6-94-ல் அமரத்துவம் எய்திய எங்கள் குலவிளக்கு திரு. பொன். நாகரத்தினம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஓடிவந்து உதவிகள் பல புரிந்தோர்க்கும், ஆறுதல் கூறினோர்க்கும், மேலும் அவரது இறுதிக் கிரியைகளில் சமுகமளித்த உறவினர், நண்பர்கள், மூதறிஞர்கள் ஆகியோர்க்கும், யாழ் மருத்துவமனையில் உதவிகள் புரிந்த மருத்துவர்கள், மற்றும் ஊழியர்கள், அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

3-7-94இல் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திக்கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்.**

கப்பல் வளவு, சுன்னாகம். (சி-9716)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

### சிந்தனைக்கு..

தனக்கு ஒரு முகம் காட்டி ஊராருக்கு இன்னுமொரு முகம் காட்டுபவன் நாளடைவில் தன் உண்மையான முகம் எது என்று அறியாமல் திணறுவான்.

- ரந்தேனியல் ஹர்தார்ன்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 02-07-94

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண்- 05

## மக்களை முட்டாளாக்கும் அரசியல் சதுரங்கம்

பொதுத் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டு விட்டது. யானைச் சின்னத்தில் போட்டியிடுதல் என்ற இ. தொ. காவின் முடிவானது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுதல் என்ற முடிவின் அடிப்படையிலானதே ஆகும்.

இ. தொ. காவின் இந்நிலைப்பாடானது ஆச்சரியம் தரக் கூடியதோ அன்றி அதிர்ச்சி தரக் கூடியதோ அல்ல. பொதுவாக எதிர்பார்க்கப்பட்டதொன்றுதான். ஆனால், இதில் குறிப்பிடக் கூடியதொரு அம்சம், அமைச்சர் தொண்டமான் கையாண்ட வழிமுறைதான். இதன் மூலம், இ. தொ. காவைப் பொறுத்து, ஆக்குபவனும் நானே அழிப்பவனும் நானே என்பதைத் தொண்டமான் மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டியுள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த 27ஆம் திகதி அவசரமாகக் கூடிய இ. தொ. காவின் நிருவாக சபையும், தேசிய சபையும் இரு முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றின. ஒன்று அக் கட்சியின் செயலாளரான செல்லச்சாமியை கட்சியில் இருந்து வெளியேற்றியதோடு தொண்டமானின் பேரனை பொதுச் செயலாளராகவும் நியமித்தது. இரண்டாவது பொதுத் தேர்தலில் கட்சியின் நிலைப்பாடு குறித்துத் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை தொண்டமானுக்கு வழங்கியது.

ஆனால், இ. தொ. காவின் பொதுச் சபையும், தேசிய சபையும் அவசரமாகக் கூடியபோது வெளிவந்த செய்திகள் பொதுத் தேர்தலில் இ. தொ. கா. தனித்துப் போட்டியிடுவதா? அல்லது வேறு ஏதாவது கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதா? என்பது பற்றி முக்கியமாக விவாதிக்கும் எனத் தெரிவித்தன. தனித்துப் போட்டியிடுவதற்கு பலர் விரும்புவதாகவும் தெரிவித்தது. ஆனால் கூட்டத்தின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமானது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாகத் தெரிவித்தது. கட்சிக்குள் தேர்தலில் தனித்து

## தேர்தலில் போட்டியிட கி.உ. களுக்கு நிபந்தனை

(கொழும்பு)

கிராம உத்தியோகத்தர் ஒருவர் எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்காக பதவியிலிருந்து விலகினால் அவர் அரசாங்கத் துறைப் பதவிக்கு உரித்தற்றவராவார் எனப் பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

கிராம உத்தியோகத்தருக்கு எதிர்காலத்தில் நியமனம் வழங்கப்படும் போது இந்த விதியினை நியமனக் கடிதத்தில் உறுதியாகக் குறிப்பிட வேண்டுமெனவும் அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேர்தலில் போட்டியிட உயர் அதிகாரி பதவிதுறப்பு

(கொழும்பு)

ஆகஸ்டில் நடைபெற விருக்கும் சிறிலங்கா பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக தகவல், செய்தி தொடர்புகள் அமைச்சின் செயலாளர் சுனந்த மத்தும பண்டார இன்று தமது பதவியை ராஜினாமா செய்யவுள்ளார்.

இவர் கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடுவார் என்று தெரிய வருகிறது. இதேவேளை மேலும் சில உயரதிகாரிகள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தேர்தலில் குதிப்பர் என தெரியவருகிறது.

### அரசியற் கட்சிகள் கோரினால்

## தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச கண்காணிப்புகுழு

(கொழும்பு)

பொதுத் தேர்தலை கண்காணிக்க சர்வதேச கண்காணிப்பு குழு ஒன்று தேவை என அரசியல் கட்சிகள் கோரும்பட்சத்தில் அது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா கொழும்பில் பத்திரிகை ஒன்றிற்குத் தெரிவித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், சர்வதேச கண்காணிப்புக் குழுவினை அழைப்பது அரசியல் கட்சிகளின் வேண்டுகோளிலேயே தங்கியுள்ளது என்றார்.

# அதிகமானவாக்குபெறுவாரா? அநுராவிற்கு சந்திரிகா சவால்

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்காவால் முடிந்தால் தன்னுடன் பொதுத்தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு ஒருவாக்காலாவது வெற்றி பெறட்டும் பார்க்கலாம் என சந்திரிகா குமாரணதுங்கா சவால் விட்டுள்ளார்.

அண்மையில் பெல்மதுளையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டத்தில் உரையாற்றிய சந்திரிகா சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆறு முன்னாள் எம். பி. களை ஐ. தே. கட்சிக்கு இழுத்துச்சென்ற அநுரா பண்டாரநாயக்கா இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று கூறுகின்றார். தேசியப்பட்டியலின் ஊடாகவே பாராளுமன்றத்தினுள் நுழைய அவர் எண்ணுகிறார் முடியுமானால் கம்பஹா மாவட்டத்தில் என்னுடன் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு என்னைவிட ஒரு வாக்காவது கூடுதலாக பெறட்டும் பார்க்கலாம்.

ஐ. தே. கவுக்கு சென்ற ஆறு பேரினதும் பெயரை எமது கட்சிப்பட்டியலில் இருந்து மூன்று வாரத்திற்கு முன்பே நாம் நீக்கிவிட்டோம். அவர்களில் ஒருவராவது முடியுமானால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஓர் ஆசனத்திலாவது வெற்றி பெறட்டும் பார்க்கலாம். அது அவர்களால் முடியாத காரியம் இவர்கள் மக்கள் முன்னே என்னதான் கூறப்போகிறார்களோ தெரியாது. இவர்கள் ஜனாதிபதியுடன் தேர்தல் பிரசாரத்திற்கு வந்து சூரியகந்த எலும்புக்கூட்டையா காட்டப் போகிறார்கள்?

ஐ. தே. கட்சி இன்னும் எட்டு மாதகாலங்கள் பதவியில் இருந்திருக்கலாம். அவ்வாறு இருக்கையில் அரசாங்கம் தானாகவே தற்கொலை செய்து கொண்டு விட்டது இன்று ஐ. தே. கட்சிக்குள் ஆறு பிரிவுகள் உள்ளன என்றார்.

### அநுரா சவால்

இதேவேளை கடந்த மாகாணசபைத் தேர்தலின் போது பெற்ற விருப்பு வாக்கு எண்ணிக்கைகளைக் காட்டிலும் அதிகமான வாக்குகளை எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் சந்திரிகா பெற்றுக் காட்டட்டும் என அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா பகிரங்க சவால் விடுத்துள்ளார்.

திருமதி பண்டாரநாயக்கா அல்லது தாம் கடந்த மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாததன் காரணமாகவே சந்திரிகா அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்றார். எனினும் கடந்த பொதுத்தேர்தலின் போது மூன்றாவது அதிகப்படியான வாக்குகளைப் பெற்றது தாமே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## குற்றச்சாட்டை நிரூபித்தால் அரசியலில் விலகத் தயார்

### ஹமீத் அறிவிப்பு

(கொழும்பு)

ஹாரிஸ்பத்துவவுக்குபெற்ற கொரிய நாட்டின் உதவி குறித்து என் மேல் அபகீர்த்தி பரப்பப்பட்டு வருகிறது இக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால் அரசியலிலிருந்தே விலகிவிடுவதாக அமைச்சர் ஹமீத் அறிவித்துள்ளார்.

சில பொறுப்பற்ற அங்கத்தவர்களின் இந்த விஷமத்தனமான குற்றச்சாட்டுகளைப் பாராளுமன்ற விசேட உரிமைகள் என்ற போர்வையின் கீழிலிருந்துசுமத்துவதாகவும் அவர் மேலும் கூறினார். இக் குற்றச்சாட்டு ஆதாரமற்ற ஒன்று என்றும் அவர் கூறினார்.

# இனப்பிரச்சினையை ஏன் பேச்சு மூலம் தீர்க்க முடியாது?

### காமினி திசாநாயக்கா கேள்வி

(மாத்தறை)

கெரில்லா யுத்தங்கள் நடைபெற்று வந்த நாடுகளிளெல்லாம், இன்றுபேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகையில், பேச்சுவார்த்தை மூலம் வடக்கு - கிழக்குப் பிரச்சினையை ஏன் தீர்க்க முடியாது, என காமினி திசாநாயக்கா கேட்டுள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற வைபவமொன்றில் அவர் உரையாற்றுகையில் ' இந்த நாட்டின் எதிர்கால சுபீட்சத்தைக் கருதி இனப்பிரச்சினையை அவசரமாகவும், உடனடியாகவும் தீர்க்க சகல கட்சிகளும் முன் வர வேண்டும். தற்போதைய இனப்பிரச்சினையை தீர்த்து நாட்டு மக்களிடத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்தினால் மாத்திரமே இந் நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

## வேட்பாளர் பட்டியல் தயார்

எதிர் வரும் பாராளுமன்ற தேர்தலில் ஐந்து மாவட்டங்களின் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுவிட்டதாக ஐக்கிய தேசிய கட்சி சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம், பொலநறுவை, கேகாலை, புத்தளம், கம்பஹா ஆகிய மாவட்டங்களின் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுவிட்டதாக

## லலித் பிரிவின் ஆதரவு பொது மக்கள் முன்னணிக்கு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் பிரிவு, பொதுமக்கள் ஐக்கிய முன்

அத்துலத் முதலி கூறியுள்ளார்.

ஒரு பொதுச் சின்னத்தின்

## ஐ.தே.கவிற்கு வாக்களிக்க ஹேமா கோரிக்கை

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தலைமையில் ஐ. தே. கவுடன் யாவரும் கைகோர்த்து எதிர்வரும் தேர்தலின் வெற்றியை முன்னெடுத்துச் செல்லவேண்டும் எனஹேமா பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம்தங்காலையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் நாம் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் போலவாழவேண்டும் என்றும் இதன்மூலம் மட்டுமே நாட்டின் அபிவிருத்தியை மேலும் முன்னெடுத்து செல்லலாம் என்றும் இதற்கு தலைவர் தான் எனமேலும் தெரிவித்துள்ளார்.

## வழக்கு தாக்கல் செய்ய உத்தேசம்

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் எட்டுப்பேர் தமது கட்சிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்போவதாக அக்கட்சி வட்டாரங்கள் ' லங்காதீப ' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளன.

கட்சி உறுப்பினர்களின் சிறப்புரிமையை பாதிக்கும் வண்ணம் இவ் நடவடிக்கை அமை

தெரிவித்தது. ஆனால் கூட்டத்தின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமானது ஏகமனதாக நிறைவேற்றப்பட்தாகத்தெரிவித்தது. கட்சிக்குள்தேர்தலில் தனித்து போட்டியிடுவது பற்றி எவருமே பேசியதாகத் தெரியவில்லை.

சுருக்கமாகக் கூறுவதானால் அமைச்சர் தொண்டமான் அவை பற்றிப் பேசுவதற்குத் தயாராகவோ அன்றி வேறு யாராவது பேசுவதற்கு அனுமதிப்பதற்கோ விரும்பவில்லை என்றே கூறலாம். ஆனால், அமைச்சர் தொண்டமான் இ.தேசிய சபை, நிர்வாக சபைக் கூட்டங்களைப் பயன்படுத்தி தனது விருப்பத்திற்கேற்ற தீர்மானங்களை மட்டும் நிறைவேற்றச் செய்துள்ளார். என்பதே யதார்த்தமானதாகும்.

செயலாளர் செல்லச்சாமியை சந்தர்ப்பம் பார்த்து வெளியேற்றியுள்ளார். இதற்கு முன்னர் இ.தொ.கா யாருடன் கூட்டுச் சேர்வது என்பதை இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று கூறியதன் மூலம், ஐ.தே.க விற்கு ஒரு எச்சரிக்கை விடுத்த தொண்டமான் இதன் மூலம் செல்லச்சாமி விடயத்தில் ஐதேக தலையிடாமல் பார்த்துக் கொண்டார். இதன் பின்னர் செல்லச்சாமியை வஞ்சம் தீர்த்துக் கொண்டார்.

அடுத்ததாக தனது பேரனான ஆறுமுகம் தொண் டமானை செயலாளராக்கியதன் மூலம் கட்சிக்குள் தனது குடும்ப ஆதிக்கத்தைத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் நிலைநாட்டிக்கொண்டார். இதன் மூலம்இ. தொ. கா விற்குள் இனிமேல் ஒரு செல்லச்சாமி உருவாவதை தடுத்துள்ளார்.

இறுதியாக ஐ.தே.கவுடன் கூட்டுச் சேருதல் என்ற தன்னுடைய நிலைப்பாட்டை நிறைவு செய்வதற்கு ஏற்ற வகையில் அதற்கான அதிகாரத்தை இ. தொ. காவின் நிருவாக சபை, தேசிய சபை என்பனவற்றிடம் இருந்து பெற்றுக் கொண்டார். இதைத் தொடர்ந்து தாமதமின்றி தனது ஆதரவை ஐ.தே.கவிற்ந அறிவித்து விட்டார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்ட போது மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளை யார் தீர்த்து வைக்கின்றார்களோ அவர்களையே ஆதரிக்கப் போவதாகக் கூறிய தொண்டமான், கட்சியிடம் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டதும், ஐ.தே கவுடன் கூட்டை அறிவித்து விட்டார். எதிரணியினரின் நிலைப்பாடு எதைப்பற்றியும் அவர் அக்கறை காட்டவில்லை. இந்நிலையில் தொண்டமான், மலையக மக்களின் உரிமை பற்றிப் பேசியதென்பது வெறும் ஏமாற்றாகும் என்பதை நிருபித்துள்ளார்

திரு. தொண்டமான் இவ் அரசியல் சதுரங்கமும், சாணக்கியமும், பாராளுமன்ற அரசியலில் அவரது அனுபவத்தின் வெளிப்பாடாக இருக்கலாம். ஆனால், இதுவே சில சமயம் ஆபத்தானதாகவும் முடிந்துவிடலாம். ஏனெனில் மலையக மக்கள் தொடர்ந்து ஏமாளிகளாகஇருப்பார்கள்என எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்.

---

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் பிரிவு, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் தேர்தல் ஒதுக்கீடு சம்பந்தமாக பேசி வருவதாக அதன் தலைவி சிறிமானி அத்துலத் முதலி கூறியுள்ளார்.

ஒரு பொதுச் சின்னத்தின் கீழேயே தங்கள் பிரிவும் போட்டியிடும் என்றும் சிறிமானி மேலும் கூறினார்.

---

றுவை, கேகாலை, புத்தளம், கம்பஹா ஆகிய மாவட்டங்களின் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுவிட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

என்றும் இதன்மூலம் மட்டுமே நாட்டின் அபிவிருத்தியை மேலும் முன்னெடுத்து செல்லலாம் என்றும் இதற்கு தலைமைதாங்கக்கூடியதற்போதைய தலைவர்டி.பி.விஜேதுங்கா

என.

கட்சி உறுப்பினர்களின் சிறப்புரிமையை பாதிக்கும் வண்ணம் இவ் நடவடிக்கை அமைந்துள்ளதாக அவ் வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுயேட்சையாக போட்டியிட கொழும்பில் தமிழர்முயற்சி

## தமிழ்க் காங்கிரஸ் ஏற்பாடு

கொழும்பு தேர்தல் மாவட்டத்தில் தமிழ் காங்கிரஸ் சுயேட்சையாக வேட்பாளர்களை நிறுத்தவிருப்பதாக அதன் தலைவர் குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

கட்சிக்கு அப்பாற்பட்டு இச் சுயேட்சைக் குழு அமையும் எனவும், கொழும்பு வாழ் தமிழ் மக்கள் ஒன்று திரண்டு தமது வாக்குப் பலத்தைக் காட்டினால் மூன்று உறுப்பினர்களை தெரிவு செய்யலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

# வட-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண்பது முதற்கடமை

## -திருமதி சந்திரிகா

(கொழும்பு)

இன்று எம்நாட்டில் பாரிய பணச் செலவையும், உயிர்ச் சேதத்தையும் ஏற்படுத்தி வரும் வடக்கு- கிழக்கு பிரச்சினை தொடர்ச்சியான அரசாங்கங்களினாலும், அரசியல் வாதிகளாலும் வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட பிரச்சினையாகும். இந்த அநாவசிய பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது எமது முதற் கடமைகளில் ஒன்று என சந்திரிகா குமாரணதுங்கா கூறியுள்ளார்.

கடந்த ஞாயிறன்று கொழும்பு வர்த்தகர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

திறந்த பொருளாதாரக் கொள்கையின் எதிர்காலம் குறித்து அங்கு குறிப்பிட்ட அவர், மக்களினதும் நாட்டினதும் சுபிட்சத்தை மனதிற் கொள்ளாது குறிப்பிட்ட ஒரு குழுவினரின் மேம்பாட்டுக்காக பொருளாதாரக் கொள்கையை அரசு மாற்றியமைத்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

---

## சு. கட்சியிலிருந்து விலகினார்

சுதந்திரக் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினராக இருந்த எஸ்.எல். குணசேகர நேற்று அக்கட்சியின் தனது உறுப்பினர் பதவியில் இருந்து இராஜினாமா செய்து கொண்டுள்ளார்.

சுதந்திரக்கட்சியின் நடவடிக்கையில் ஏற்பட்ட விரக்தியை தொடர்ந்து தான் இந்த முடிவுக்கு வந்ததாகவும் ஆனால் தான் முன்னர் பிரதிநிதித்துவம் செய்த ஐக்கிய தேசியக் கட்சியில் சேரும் எண்ணம் இல்லை என்றும், எனவே தான் அரசியலில் இருந்து ஓய்வு பெறப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்ற உறுப்பினர்கள் பணக்காரராவது எப்படி?

## ஹேமகுமார விளக்குகிறார்

(கொழும்பு)

பாரிய நிறுவனங்களின் ஊழல்களை அம்பலப்படுத்தப் போவதாக மிரட்டியே சைக்கிள் வாங்கவழியில்லாதுஇருந்தவர்கள் எம். பியானதும் கோடீஸ்வரராகின்றனர் என்கிறார் சு. க. எம்.பியான ஹேமகுமார நாணயக்கார.

செவ்வாய் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதுபற்றி குறிப்பிட்ட நாணயக்கார சைக்கிள் ஒன்றைக் கூட வாங்கமுடியாத நிலையிலிருந்தோர் எம். பி. யானதும் கொழும்பில் ஆடம்பர பங்களாக்களில் படாடோபமாக வாழ்கின்றனர். அவர்கள் வாங்கும் சம்பளத்தால் இந்த ஆடம்பரம் கிடைப்பதில்லை. இந்த வாழ்க்கை வேறுஒருவழியால்தான்கிடைக்கிறது.

இவர்கள் நாட்டிலுள்ள பாரிய நிறுவனங்களின் செயல்பாடுகளை ஆராய்ந்து அவை விட்டுள்ள தவறுகளை மோப்பம் பிடிப்பார்கள். பின்னர்அத் தவறுகளை பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப் போவதாக குறித்த நிறுவனங்களுக்குத் தெரியப்படுத்துவார்கள். அவ்வளவுதான் உடனே ஆடம்பர வாழ்வு அவர்களைத் தேடி வந்[illegible]விடும்.

எம். பிக்கள் வருடாந்தம் சொத்து விபரங்களை வெளியிடுவர். அவை பாராளுமன்ற அலுமாரியில் பத்திரமாக தூங்குகிறது என்றார்.

---

## எறிகணை வீச்சு

காரைநகர் இராணுவ- கடற்படை கூட்டு முகாமில் உள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் 28 ஆம் திகதி இரவு 7.10 மணியளவில் பொன்னாலை, மூளாய் பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர்.

இதேதினம் மண்டைதீவு, தீவகப்பகுதிகளிலுள்ள இராணுவத்தினரும் அராலி, பொன்னாலை கடற்பரப்புக்களை நோக்கி இரவு வேளை தொடர்ச்சியாக பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டனர். இவ் வேளை ஆங்காங்கே துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்ட வண்ணம் இருந்தன.

# பொ.ஐ.மு. யுடன் இணைந்து ம. ஐ. மு. போட்டியிடலாம்?

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் தனது கட்சி இணைந்து எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக நேற்று கட்சித் தலைவி வீட்டில் நடைபெற்ற சந்திப்பு வெற்றி அளிக்கக் கூடிய வகையில் நடைபெற்றதாக மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

எனவே இன்று நாடு திரும்பும்கட்சித்தலைவிசிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் மீண்டும் இறுதி பேச்சுவார்த்தை நடைபெறும்இதில் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அநுராதபுரத்தில் இன்று பொ.மு. பிரசார ஆரம்பம்

(கொழும்பு)

எதிர் வரும் 16-ம் திகதியன்று ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் பிரசாரத்தைகண்டியில் ஆரம்பிக்கும் எனவும், பொதுமக்கள் கூட்டு முன்னணி, தனது பிரசாரத்தை இன்று அநுராதபுரத்தில் ஆரம்பிக்கும் எனவும் தெரிய வருகின்றது.

தொகுதி மட்டத்தில், மாவட்டமட்டத்தில் ஒவ்வொருகட்சியினதும் வேட்பாளர்களின் எண்ணிக்கை குறித்து முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஓர் இணக்கத்துக்கு வந்துள்ளன என, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் திரு. டி. எம். ஜயரத்னா கூறியுள்ளார்.

பொது நூலகம் யாழ்ப்பாணம்
நல்லூர் இளைஞர் நூலகம்.



# ஏ.என்.சி. கெரில்லா தலைவர் இராணுவ அதிகாரியானார்

## 3 மாத இராணுவ பயிற்சிக்கு உள்ளாவார்

(ஜொகனர்ஸ்பேர்க்)

தென்னாபிரிக்க இராணுவத்தின் இரண்டாவது நிலையான அதிகாரிகள் நிலை தலைவராக ஆபிரிக்க தேசிய காங்கிரசின் இராணுவப் பிரிவு பொறுப்பாளர் தென்னாபிரிக்க அரசால் நியமிக்கப்பட்டுள்ளார்.

நியாண்டா என்னும் இவர் லெப். ஜெனரல் தரத்திற்கு இராணுவத்தில் பதவி உயர்தப்பட்டும் உள்ளார். ஜெனரல் நியாண்டா முன்னர் ஆபிரிக்க சேசிய காங்கிரசின் இராணுவப் பிரிவான 'தேசத்தின் ஈட்டி' அமைப்பின் இராணுவ பொறுப்பாளராக விளங்கியவர். நிறவெறிக்கு எதிராக செயற்பட்ட இந்த கெரில்லாத் தலைவருடன் ஏனைய 9 கறுப்பினத்தவர்களும் இராணுவத்தில் சிரேஷ்ட அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சில மாதங்களாக ஆபிரிக்க தேசிய காங்கிரசிற்கும் இராணுவத்தில் உள்ள வெள்ளையின அதிகாரிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களை தொடர்ந்தே இந் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதே சமயம் கெரில்லாத் தலைவராக இருந்தவர்களால் மரபுவழி இராணுவத்தில் திறமையாக தொழிற்பட முடியாது என தென்னாபிரிக்க இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து நியாண்டா மூன்று மாத இராணுவப் பயிற்சிக்கு உள்ளாக்குவதற்கு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இணக்கம் தெரிவித்துள்ளது.

### உலகக் கிண்ண போட்டி;

# இரண்டாம் சுற்றிற்கு தெரிவான அணிகள்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி தொடரில் மேலும் இரு போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

நைஜீரியா, கிரீஸ் அணியை 2-0 எனும் கோல்கணக்கில் வெற்றி கொண்டது. பல்கேரியா, ஆர்ஜண்டீனாவை 2-0 எனும் கோல்கணக்கில் தோற்கடித்தது.

இரண்டாவது சுற்றுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. இதில் 8 போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. இதில் பங்குபெறவுள்ள நாடுக ஜேர்மனி-பெல்ஜியம், ஸ்பெயின் - சுவிஸ்சர்லாந்து, சவூதி-சுவீடன், ருமேனியா-ஆர்ஜன்டீனா, நெதர்லாந்து-அயர்லாந்து, பிரேசில்-அமெரிக்கா, நைஜீரியா-இத்தாலி, மெக்ஸிக்கோ-பல்கேரியா என்பனவாகும்.

# ஆங்கில கால்வாயை கடக்க குற்றாலீஸ்வரன் முயற்சி

(சென்னை)

கடலில் நீந்தி பல சாதனைகளை நிகழ்த்திய தமிழ் நாட்டுச் சிறுவன் குற்றாலீஸ்வரன் ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடக்கும் முயற்சியாக அடுத்த வாரம்இலண்டன் செல்கிறார் வரும் ஆகஸ்ட் இரண்டாவது அல்லது மூன்றாவது வாரத்தில் அவர் இம் முயற்சியை மேற் கொள்வார். அதற்கு முன்பாக ஒன்றரை மாதங்கள் பூர்வாங்க பயிற்சிகளை அவர் மேற் கொள்வார்.

இதற்கான செலவாக ஆறு இலட்சம் ரூபாவை தமிழ் நாடு மாநில அரசு வழங்கியுள்ளது.

குற்றாலீஸ்வரன் அண்மையில் 32 கி. மீ நீளமான பாக்கு நீரிணையை நீந்திக் கடந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொலராவிற்கு சிறுமி பலி

(வடமராட்சி)

கொலரா நோய்க்கு எட்டு வயது சிறுமி ஒருவர் பலியானார்.

புற்றளையைச் சேர்ந்த சிறுமியே நேற்று முன்தினம் கொலராவிற்கு பலியானார்.

(யோ)

# அறிவியல் வினாடி வினா

ஜூலை 5 கரும்புலிகள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடாத்தும் அறிவியல் வினாடிவினா தொடர் போட்டி இன்று காலை 9.00 மணிமுதல் யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

மாணவரமைப்பு பொறுப்பாளர் ந. இன்பன் தலைமையில் நடைபெறும் இப்போட்டித் தொடருக்கு, பிரதம விருந்தினராக, கல்வி மேம்பாட்டு பேரவைத் தலைவர் அருட்திரு. பிரான்சிஸ் ஜோசப் அடிகளார்கலந்துகொள்வார்.

# கரும்புலிகள் நினைவாக கிராமிய எழுச்சி பாசறை

முல்லை மாவட்டம் கரும்புலிகள் நாளையொட்டி முத்தையன் கட்டுப் பெரிய சாலமன் பகுதியில் கிராமிய எழுச்சிப் பாசறை நடைபெற்றுள்ளது. இது கடந்த 26 தொடக்கம் 6 தினங்கள் நடைபெற்றது.

இக்கிராமம் முல்லை மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய கிராமமாகும். இங்கு மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றிக் காணப்பட்டனர். இதை நிறைவு செய்யும் முகமாகவே இப்புனித நாளில் இவை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முல்லை மாவட்ட பதில் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. செந்தில் அப்பன் அவர்கள் மங்கள விளக்கினை ஏற்றிவைத்தார். முல்லை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் திரு. பூவண்ணன் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து மக்களும் போராளிகளுமாக இணைந்து தங்களது அடிப்படை வசதிகளுக்கான வீடு. கிணறு, மருத்துவம் என்பன வற்றை பூர்த்தி செய்து வருகின்றனர். இவ் எழுச்சிப் பாசறை முடிவுற்றாலும் இக் கிராமத்தின் சகல அடிப்படைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும்.

# கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

கே. சீ. சீ. சீ வெற்றிக் கிண்ணத்துக்காக கொககுவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும் மட்டுப் படுத்தப்பட்ட 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று காலை 8. 30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகின்றது. இதன் இறுதிப் போட்டி எதிர்வரும் 23 - ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்றைய போட்டியில் காலை 8 00 மணிக்கு கொக்குவில் சீ. சீ. சீ - ஏ எதிர் மானிப்பாய் பரிஸ் பியும் மாலை 1.00 மணிக்கு வீனஸ் எதிர் ஒல்ட் கோல்ட்ஸ் அணியும் மேதும்.

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் விலங்கு பரிபாலன டிப்ளோமா பாடநெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

வெலிசற, அனுராதபுரம் ஆகிய இடங்களில் இயங்கும் விலங்கு பரிபாலன பாடசாலைகளில் தமிழ் சிங்கள

# இலட்சங்களால் பெண்ணை அலங்கரிக்கும் இழிவு நிலையை இல்லாதழிப்போம்

# கரும்புலிகளின் உருவப்பட படகு ஊர்தி பவனி

14 கரும்புலிகளின் திருவுருவப்படம் தாங்கிய வடிவமைக்கப்பட்ட நீரூந்து விசைப் படகு ஊர்தி பவனி நேற்று காலை 11 மணிக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்திலிருந்து ஆரம்பமாகியது. இவ்வூர்திக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்தில் பெருந்திரளான மாணவர்களும், ஆசிரியர்களும் அஞ்சலி செலுத்தினர்.

இதைத் தொடர்ந்து நாகர் கோவில் வரை பெருந்திரளான மக்கள் வழி நெடுகிலும் மலர்கள் வைத்து அஞ்சலி செலுத்தினர். இவ் வூர்தி கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினரால் வடிவமைக்கப்பட்டு பவனியில்ஈடுபடுத்தப்படுகிறது

### 9க்கு

கும்படி பாடசாலை அதிபர்களுக்கு யாழ். வலயம் - 1 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### பலாலியில்

கூறப்படுகிறது-

கிழக்கு ஏழாலையைச் சேர்ந்த வீ- மகாலிங்கம் (30 வயது) என்பவரே மேற்படி எறிகணைத்தாக்குதலில் காயமடைந்தவர் ஆவார்-

### ஐ.தே க. அரசியல்

டாக மேற்படி தென் கிழக்கு ஆசிய ஆயுத விநியோகத்தர் மூலம் பரிமாற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

### மெய்வல்லுநர் போட்டி

யாழ். வலயம், பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் தலைமையில் பி ப 1.30மணிக்கு ஆரம்பமாகும். இப்போட்டிகளுக்குப் பிரதம விருந்தினராக ஒலிம்பிக்வீரர் திரு. நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் அவர்கள் கலந்துகொள்வார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி அவர்கள் கலந்துகொள்கிறார்கள்.

# இன்று

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டம் நடாத்தும் சிறுவர் நாடக விழா இன்று காலை 9 மணிக்கு மருதனார் மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரியில் நடைபெறும்.

ஃ ஃ

மாதகல் நுணசை வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று பி.ப 1.30 மணிக்கு அதிபர் திரு. அ- பேரம்பலம் தலைமையில் நடைபெறும்-

ஃ ஃ

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு 6 ல் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கூட்டமொன்று இன்று காலை 8-30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும்-

ஃ ஃ

யாழ்- புனித மரியாள் வித்தியாலய தமிழ் இலக்கிய விழா இன்று காலை 9-00 மணிபளவில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்- யாழ்ப்பாண பிரதேச செயலர் க. குணராசா முதன்மை விருந்தினராக கலந்து கொள்வார்-

### 350கிலோ

கான சாதனமும் அவ்வானில் பொருத்தப்பட்டிருந்தது எனவும் இந்தக் குண்டு வெடிக்குமானால் சம்பவ இடத்திலிருந்து 300-400 யார் வரை முற்றாக எரிந்து சாம்பலாகியிருக்கும் எனவும் தெரிவித்தனர்.

மேலும் குண்டு பொருத்தப்பட்ட வாகனம் சுமார் ஆறு மாதங்களாக வாகனம் நிறுத்தப்படும் இடத்தில் நிறுத்தப்பட்டு வந்தது எனவும் அதற்கிடையில் பல தடவையில் கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் செலுத்தப்பட்டு வந்தது எனவும் கொழும்பிலுள்ள பிரதான இடங்களைப் பற்றிய தகவல்களைப் பெற இவ் வாகனம் செலுத்தப்பட்டு வந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

மேலும் இத்தகைய வாகனக் குண்டுகள் பல இருக்கலாமென பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு தலைமையகம் தொடர்ந்து விசாரணைகளை நடாத்தி வருகின்றது எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இதே வேளை அரசியல் கொலைக்கான திட்டமொன்று இதன் பின்னணியில் இருக்கலாமென பொலிசார் கருதுகின்றனர்.

புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கரும்புலிகள் மூவர் இத்திட்டத்தை மேற்கொள்ள தயாரானதாக கூறப்படுகின்றது.

சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்ட போது இருவர் தற்கொலை செய்து கொண்டனர் எனவும் ஒருவர் இவ் அதிசக்தி வாய்ந்த குண்டு பற்றிய தகவலைத் தெரிவித்தார் எனவும பொலிசார் கூறுகின்றனர்.

# கரும்புலிகள் நாள்; போட்டி முடிவில் மாற்றம்

மட்டக்களப்பு-அம்பாறை மாவீரர் பணிமனை நேற்று ஈழநாதத்தில் வெளியிட்ட ஜூலை - 5 கரும்புலிகள் நாள் கட்டுரைப் போட்டி முடிவில்; 1-ம், 3-ம் இடங்களைப் பெற்ற கட்டுரைகள் போட்டியில் இருந்து விலக்கப்பட்டு - முதல் இடம் ராஜாவும், இரண்டாம் இடம் மிருணாவும் மூன்றாம் இடம் வினோத்தும் பெறுகின்றனர். ஐந்து ஆறுதல் பரிசில்களை, சுரேஸூம், பரணரூபனும் பிருத்தவனும் மொழிவாணனும் செல்வராசாவும் பெறுகின்றனர். சிறப்புப் பரிசினை தமிழ்ச்செல்வன் பெறுகின்றார்.

### பூநகரி

கபலமாக நின்றதுடன் பெரும் வெற்றிக்கு வழிவகுத்து கொடுத்தது.

கரும்புலிகளின் இக் கூட்டு முயற்சி மூலம் உருவாக்கப்பட்ட இந்த தந்திரோபாய தாக்குதலின் போது எதிரிகளின் இலக்குகளை தகர்த்து

(கணவதிப்பிள்ளை தவராசா திருகோணமலை)

★ கப்டன் செந்தமிழ்நம்பி (செல்லத்துரை ஜெகன் சூசையப்பர் சோவிலடி கோப்பாய் வடக்கு கோப்பாய்)

★ கப்டன் கரிகாலன் (இரத்தினசிங்கம் பிரபாகரன், திருகோணமலை)

கரும்புலிகள் ...

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்- இலங்கை.
## பல்கலைக்கழக அனுமதிகள்
## 1994/95 கல்வியாண்டு

1993 ஆகஸ்டில் நடைபெற்ற க. பொ.த (உயர்தர) பரீட்சைப் பேற்றின்படி விண்ணப்பிக்கதகுதிவாய்ந்த மாணவர்கள் பின்வரும் ஆவணங்களைசமர்ப்பித்து யாழ் பல்கலைக்கழக பரீட்சை கிளையிலிருந்து முதற் படிவத்தைநேரடியாக வந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. பரீட்சைப் பெறுபேறும், மொத்தப் புள்ளியும்-
2. தேசிய அடையாள அட்டை.
3. ரூபா 50/- இற்கான பற்றுச்சீட்டு (வங்கியால்வழங்கப்பட்டது(இளஞ்சிவப்பு) அல்லது யாழ்- பலகலைக்கழகநிதியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொண்டது.

படிவங்கள், கலை, வர்த்தகப் பிரிவுக்கு04-07-1994 உம் கணித, விஞ்ஞானப்பிரிவுக்கு05-07-1994உம்விநியோகிக்கப்படும்-

பூர்த்தி செய்யப்பட்டமுதற் படிவங்கள்15-07-1994 இற்கு முன்பாக யாழ்- பல்கலைக்கழகப் பரீட்சைக் கிளையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

பதிவாளர்

(சி. 9720)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

## முக்கிய அறிவித்தல்

இன்று பிற்பகல் 2. 00 மணிக்கு சகல கல்வி நிறுவன இயக்குநர்களும் கோண்டாவிலில் அமைந்துள்ள யாழ். மாவட்ட அரசியல் செயலகத்தில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளவும்.

நிர்வாக ஒழுங்கு முறைகள் பற்றி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கலந்துரையாடவுள்ளார்.

பொதுச்செயலாளர்
யாழ். மாவட்டம்

(சி-9725)

ளைக் கோரியுள்ளது.

வெலிசற, அனுராதபுரம் ஆகிய இடங்களில் இயங்கும் விலங்கு பரிபாலன பாடசாலைகளில் தமிழ், சிங்கள மொழிகளில் போதனை நடைபெறும்.

க. பொ. த (சா/த)பரீட்சையில் நான்கு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களசித்தியும் க. பொ. த (உ/த) பரீட்சையில் இரசாயனம், பௌதிகம், தாவரவியல், விலங்கியல் அல்லது உயிரியல் பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி ஜூலை 30ஆகும். ஜூன் மாத 24ந் திகதி வர்த்தமானியில் மேலதிக விபரங்கள் வெளிவந்துள்ளன.

### இலவச

இதேவேளை வடக்குக் கிழக்கில் இயங்கிவரும் 1848 பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு விநியோகிக்கக்கூடியதாக கோட்டரீதியாக பொதி செய்யப்பட்ட இலவச சீருடைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்வி கலாசார அமைச்சின் சிரேஷ்ட கணக்காளர் பி. சுபசிங்கா அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சகல கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார், (பா. 17)

யாழ். ஸ்ரீதரில்
STEVENSPIELBERG
இயக்கிய
JURASSIC PARK
(அறிவியல் சார்ந்த திகில் படம்)
தினசரி 4, 6
சனி, ஞாயிறு 10.30, 4.6 மணி
(சி-9872)

கரும்புலிகளின் இக் கூட்டு முயற்சி மூலம் உருவாக்கப்பட்ட இந்த தந்திரோபாய தாக்குதலின் போது எதிரிகளின் இலக்குகளை தகர்த்து பூநகரி வெற்றிக்கு வழி சமைத்து பலாலியில்மேற்கொண்ட கரும்புலித் தாக்குதலில்

★ மேஜர் கலையழகன் (பொன்னையா பேரின்பராசா மட்டக்களப்பு)

★ மேஜர் தொண்டமான் (கண்ணப்பர் நல்லதம்பி மட்டக்களப்பு)

★ கப்டன் ஐயனார் (செல்வநாயகம் இராசசேகரம் அராலி கிழக்கு வட்டுக் கோட்டை)

★ கப்டன் சிவலோகன் (சின்னத்தம்பி அருளானந்தம் மட்டக்களப்பு)

★ கப்டன் சீராளன் (ஞானப்பிரகாசம் குணம் உயிர்தராசன் குளம் முருங்கன் மன்னார்)

★ கப்டன் மதிநிலவன்

பாய் வடக்கு கோப்பாய்)

★ கப்டன் கரிகாலன் (இரத்தினசிங்கம் பிரபாகரன், திருகோணமலை)

★ லெப்டினன்ட் வீரமணி (தெய்வேந்திரம் சுதாகர் வட்டுக்கோட்டை கிழக்கு வட்டுக்கோட்டை)

★ லெப்டினன்ட் செங்கண்ணன் (செந்தூர் பாண்டியன் யாழ்ப்பாணம்)

★ லெப்டினன்ட் கண்ணன் நவரட்ணம் நேசகுலேந்திரன் உடுத்துறை வடக்கு, தாளையடி)

★ லெப்டினன்ட் ஜீவரஞ்சன் கிருஸ்ணபிள்ளை முருகுப்பிள்ளை மட்டக்களப்பு)

★ லெப்டினன்ட் நல்லதம்பி (தங்கராசா கோகுலநாதன் மட்டக்களப்பு)

ஆகிய 13 கரும்புலிகளும் பூநகரி கூட்டுத்தளம் தாக்குதல் வெற்றிக்கு வித்தாகினர்-

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்-

### ஐ.தே.க

வித்தார். இவ் வைபவத்தில் அமைச்சர் தொண்டமானும் கலந்து கொண்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் எதிர்காலத்தில், மலையகத் தமிழ்மக்கள், ஏனைய மக்கள் போன்று முன்னேற்றமடைய தொண்டமானுடன் இணைந்து நாமும் பணி புரிவோம் என்றார்.

### கலந்துரையாடல்

டல் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது இதில் சகலரையும் கலந்து கொள்ளும்படி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

### கருத்தரங்கு

பிற்பகல் 3 30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவிருந்த கருத்தரங்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் என தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994- 07- 02**
**சனி இரவு**

08 01 - கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி ''துடிப் படங்கிப் போனாலும் எம் வாழ்வின் உயிர்த்துடிப்புக்கு ஆதாரமானவரே''
08.20- எழுச்சி கீதங்கள்
08. 30 - செய்திகள்
08. 40 - சித்திரம் - ''கொடுமை''

**1994- 07- 03**
**ஞாயிறு காலை**


07.02- மாவீரவணக்கம்
07. 15 - களத்தில் மலர்ந்தவை
07. 30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## கரும்புலிகள் பாடல்கள்

யூலை 5 கரும்புலிகள் நாளை முன்னிட்டு சிற்றூர்திகள், முச்சக்கரவண்டிகள், பொதிசுமக்கும் வண்டிகள், மோட்டார் வண்டிகள் ஆகியவற்றில் சினிமாப்பாடல்களைத் தவிர்த்து கரும்புலிகளின் பாடல்களை ஒலிபரப்புமாறு கேட்டுக்கொள்கின்றேம்.

சிற்றூர்தி சேவை சங்கங்களின் இணையம்
(சி 9726)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



| தாயின் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 04 02 - 1967 | 19 - 05 - 1994 |

## கடற்புலி கப்டன் கணேஸ்
### (சோமசுந்தரம் ரவிச்சந்திரன்)

மண்ணை நேசித்த மாவீரா! .. எமக்கு
கண்ணாய் நீ இருந்தாய் புலிவீரா .. உன்
கண்ணையே கொடுத்தாய் - இம்
மண்ணைக் காப்பதற்காய் ..

இவருக்கு எமது இதய அஞ்சலிகள்

தம்பிமார்கள்

செந்தூரன் வீதி,
(றெஜி)
மானிப்பாய்

(8705)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.